# நேரத்தைக் கடைப்பிடியுங்கள்

# (PUNCTUALITY)

## குறித்த நேரத்தைக் கடைப்பிடிப்பது எப்படி?

இன்றைய இயந்திர வாழ்க்கையில் நேர நிர்வாகம்; குறித்த நேரம் என்றெல்லாம் நிறையப் பேசுகிறோம்.

இந்த உலகம் நேரத்தின் அருமையை உணர்ந்திராத காலத்திலேயே மாவீரன் நெப்போலியன் இதன் அருமையை நன்கு உணர்ந்திருந்தான்.

ஒருமுறை தம் படைத்தளபதிகளை மதிய விருந்திற்கு அழைத்திருந்தான். மதிய விருந்து முடிந்ததும் போர்த் திட்டம் குறித்த விவாதம் என்றும் அறிவித் திருந்தான்.

முதலில் விருந்துதானே? முன்பின் சென்றால் போயிற்று என்ற எண்ணத்தில் தளபதிகள் நேரம் கடந்து சாவகாசமாக நுழைய,

''நல்லது தளபதிகளே! மதிய விருந்து நேரம் முடிந்தது! இனி நாம் போர் பற்றிய விவாதங்களைத் தொடங்குவோமா?'' என்று ஈரக் கையைத் துணியால் துடைத்த படி கேட்க, தளபதிகள் மிகுந்த ஏமாற்றம் அடைந்ததுடன் அதிர்ந்தும் போனார் களாம்!

நெப்போலியன் தந்த அடுத்தடுத்த விருந்துகளுக்கு இத்தளபதிகள் அலறிப் புடைத்துக் கொண்டு வந்திருப்பார்கள் என்பதை நான் சொல்லவும் வேண்டுமா?

குறித்த நேரத்திற்கு ஒரு பொது நிகழ்ச்சிக்கு வருகிறவர்களை இச்சமூகம் ஏளனமாகப் பார்ப்பதை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. நேரத்தைக் கடைப்பிடிப்பவர்கள் இளித்தவாயர்கள் அல்லர். இவர்கள் இலட்சியவாதிகள்.

இவர்களைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடச் சொல்லவில்லை. இளக்காரமாகப் பார்ப்பதையாவது நிறுத்திக் கொள்ளலாம் அல்லவா?

ஒரு முறை ஈரோட்டில் ஒரு பொது நலச் சங்க மாநாட்டிற்குச் சிறப்பு

விருந்தினராகப் போயிருந்தேன். மாநாடு 10.30க்கு என்றார்கள்.

10.29க்கு நுழைந்தேன்.

சொன்னால் நம்ப மாட்டீர்கள்! மாநாட்டுப் பந்தலில் நான்கு பேர்களே இருந்தார்கள்.

இதைவிட வேடிக்கை என்னவென்றால் மாநாட்டு ஏற்பாட்டாளர் ''என்ன சார்! 10.30ன்னா 10.30க்கா வருவது? கூட்டம் வந்திருச்சா என்று கேட்டுட்டு அப்புறம் வந்திருக்கலாம்ல?'' என்றாரே பார்க்கலாம்!

பாராட்டுக் கூடக் கிடைக்க வேண்டாம். குட்டு வைக்காமலாவது இருந்திருக்கலாம். என் உரையின்போது பொதுத் தொண்டு செய்யும் உங்களைப் போன்ற

அமைப்புகளே குறித்த நேரத்தைக் கடைப் பிடிக்காவிட்டால் எப்படி? என்று ஒரு பிடி பிடித்தேன்.

காலஞ் சென்ற நாடகக் காவலர் ஆர். எஸ். மனோகரிடம் ஒரு நல்ல பழக்கம். நாடகம் 7.00 மணிக்கு என்றால் ‘டாண்’ என்று 7.00க்கு நாடக மணி ஒலிக் கும். நாடகமும் சரியாக ஆரம்பித்துவிடும்.

ஒருவரை ஒருவர் குறைசொல்லித் தாமதம் செய்து கொண்டிருப்பது சரியல்ல!

பூனைக்கு யார் மணி கட்டுவது என்பார்கள். நாம் கட்ட வேண்டியதுதான்.

குறித்த நேரத்திற்கு ஓர் இடத்திற்கு ஒரு நிகழ்ச்சிக்குச் செல்வது எப்படிச் சாத்தியம்?

## ஒரு தலைகீழ் கணக்கு

ஒரு நிகழ்ச்சிக்கு ஓர் இடத்திற்குக் குறித்த நேரத்திற்குச் செல்வது நமக்குச் சாத்தியமே.

எப்படி என்றால் நமக்கும் சென்றடைய வேண்டிய இடத்திற்கும் இடையே உள்ள தூரம்; பயண நேரம்; வாகனம் என்ன என்பனவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு நாம் புறப்பட ஆயத்தமாகும் நேரத்தை முதலில் நிர்ணயம் செய்ய வேண்டும்.

நான் இந்த விஷயத்தில் தலைகீழ் விதி ஒன்றைப் பின்பற்றுகிறேன்.

உங்களுக்கும் இது பொருந்தும் என்று நம்புகிறேன்.

காலையில் கோவை எக்ஸ்பிரஸை 6.15க்கு சென்னை சென்ட்ரலில் பிடிக்க வேண்டும் என்றால் 6.00 மணிக்கேனும் இரயில் நிலையத்திற்குள் நுழைந்து விடவேண்டும். 6.00க்கு நுழைய வேண்டுமென்றால் எனக்கும் சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கும் இடையே உள்ள பயண தூரம் 35 நிமிடங்கள். சாலை இடைஞ்சல்களுக்காக 10 நிமிடங்கள். அப்படியென்றால் நான் 5.15க்கு வீட்டை விட்டுப் புறப்பட வேண்டும். 5.15க்கு நான் தயாராக இருக்க வேண்டும் என்றால் காலைக் கடமைகளை முடிக்க எனக்கு அரைமணி நேரமாவது தேவை. அப்படி யென்றால் நான் 4.45க்கு எழ வேண்டும்.

இந்தத் துல்லியமான தலைகீழ் கணக்குத்தான் என்னைப் பதற்றமின்றி இரயிலைப் பிடிக்க உதவி செய்கிறது.

6.15 இரயில்தானே? 5.15க்கு எழுந்தால் போதும், ஒரு மணி நேரமே அதிகம் என்று நாம் போடுகிற தவறான கணக்குதான் நம் இதயத் துடிப்பைத் தாறுமாறாக ஆக்குகிறது.

எங்கள் ஊரில் [தேவகோட்டை] ஒரு வேடிக்கையான பழமொழி உண்டு.

'அவசரம்னா அண்டாவிற்குள்கூடக் கை நுழையாது' என்பார்கள். அதெப்படி அண்டாவிற்குள் கை நுழையாமல் போகும்? என்று எவரும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். 'பதறினால் காரியம் சிதறும்' என்பதைத்தான் இது மறை முகமாக உணர்த்துகிறது.

நேரத்தை எங்கோ கோட்டைவிட்டு விட்டு, பதற்றத்துடன் நேர்முகத் தேர்வுக்குள் நுழைகிற ஒருவர் தெரிந்த பதிலைக் கூடத் தவறாகச் சொல்லுவார்; அல்லது உளறுவார்.



# பதினைந்து நிமிடங்கள் முன்னதாகச் சென்றுவிட்டால் எப்படி ஏற்படும் பதற்றம்?

Pre Punctuality is the Real Punctuality என்பார் ஒரு மேலைநாட்டு நேர நிர்வாக வல்லுநர். முன்னதாகச் சென்றால்தான் குறித்த நேரம் என்பது சாத்தியம்.

அலுவலகத்திற்குத் தாமதமாகக் கிளம்ப நேர்ந்தால் அலுவலகத்தை நோக்கிப் பயணிக்கும் அத்துணை நேரமும் பதற்றம்தான். வேறு நினைப்பே வராது. நம்மைக் கண்டிக்கக் காத்திருக்கும் அதிகாரியின் முகமோ அல்லது முதலாளி

யின் முகமோதான் நூறு முறை தோன்றி மறையும்.

அவர் ஒரு முறை திட்டப் போவதற்குள் அவரது திட்டு, நமக்குள் பல முறை கீறல் விழுந்த கிராம்போன் பிளேட்டாய் தலைக்குள் வலம் வந்து கொண்டே இருக்கும்.


இது தேவைதானா?

சென்னையிலிருந்து திருச்சிக்குக் காரில் பயணம்! தாமதம் என்னவோ ஒரு மணி நேரம். ஆனால் பயணிக்கும் ஏழு மணி நேரமும் தேவையற்ற பதற்றம். அவசியம்தானா இது? அமைதியற்ற பயணத்திற்கு நாமே வழிவகுப்பதாவது?

தலைகீழ் நேரப் பட்டியலை உருவாக்கிச் சற்று முன்னதாகப் புறப்பட்டு

விட்டால் அந்தப் பயணத்தின் சுகமே அலாதிதான்!

எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் காலம் தாழ்த்தாது செல்ல உதவ வேறு ஒரு புதிய உத்தியும் உண்டு.



# காலம் தாழ்த்தாது செல்வது எப்படி?

"Punctuality is not a single quality; it is a mixture of many good qualities!" என்பார் ஆர்த்தர் பாரட் எனும் மேலை நாட்டறிஞர்.

குறித்த நேரத்தைக் கடைப்பிடிப்பவர் களை நன்கு கவனியுங்கள். பல நல்ல குணநலன்களைக் கொண்டவர்களாகவே இவர்கள் இருப்பார்கள்.

பிறரை மதிக்கும் இயல்பினர் இவர்கள். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றும் இலட்சியவாதிகளும் கூட!

நாம் கொடுத்த வாக்கை நாமே காப்பாற்றாமலிருந்தால் எப்படி?

ஒரு நிகழ்ச்சிக்குச் சொன்னால் சொன்ன நேரத்தில் நுழைய ஒரு நல்ல வழி இருக்கிறது.

ECG என்றால் பலரும் அறிவீர்கள். எக்கோ கார்டியோ கிராம். அதாவது இதயத் துடிப்பை அளக்கும் முறை. ஆனால் நான் சொல்ல வந்த ECG வேறு.

Extra time
Cushion time
Grace time

ஆகியவையே இந்த மூன்று. ஓர் இடத்திற்குப் புறப்படுகிறோம் என்றால் இல்லத்திலோ புறப்படும் இடத்திலோ எதிர் பாராமல் சில விஷயங்கள் நடக்கலாம்.

வீடு என்றால் குளிக்கும்போது திடீரெனத் தண்ணீர் வருவது நின்று விடலாம். துண்டையோ சீப்பையோ தேடுதேடு என்று தேடுபவர்களும் உண்டு. புறப்படும்போது ஒருவர் உள்ளே நுழைந்து ஒரு நீளமான தலைப்பை எடுத்துக் கொண்டு பேச முற்படலாம். வாகனம் பஞ்சராகி நிற்கலாம். வீட்டில் உள்ள ஓர் இளைஞன் நம் வாகனத்தை ஒரு சொட்டுப் பெட்ரோல் கூட இல்லாதபடி ஓட்டஓட்ட ஓட்டிவிட்டு பெட்ரோல் பங்கிற்குத் தள்ளிப் போக வேண்டிய சூழலைக் கூட ஏற்படுத்தியிருக்கலாம். எக்ஸ்ட்ரா டைம் என ஒன்றை ஒதுக்கிக் கொண்டால் இத்தகைய எதிர்பாராத இடைஞ்சல்களைச் சரிக்கட்டிவிட முடியும்.

சாலையில் ஏற்படும் எதிர்பாராத சிக்கல்களைச் சமாளிக்க குஷன் டைம் உதவலாம். போக்குவரத்து நெரிசல்;

பெட்ரோல் போடப் போன இடத்தில் எதிர்பாராத கூட்டம்;

அத்துமீறி உங்களைத் தாண்டி நுழைந்து பெட்ரோல் போட முயன்றவருடன் வாக்குவாதம்;

கண்டிப்பாக எடுத்துச் செல்ல வேண்டிய ஒன்றை மறந்துவிட்டுப் பாதி வழி சென்று வீடு திரும்ப வேண்டிய அவசியம் போன்றவற்றை இதற்கு உதாரணங்களாக்கலாம்.

சென்றடைந்த இடத்தில் ஏற்படக் கூடிய சிக்கல்களைச் சரிகட்ட கிரேஸ் டைம் எனும் உத்தி உதவும்.

வாகனம் நிறுத்த இடம் கிடைக்காமல் போதல்; நமக்கு முன் நீண்ட கியூ வரிசை; உரிய இடத்தைக் கண்டுபிடிக்க இயலாமல்

அலைதல் போன்றவை இதற்குப் பொருத்தமான உதாரணங்கள்.

மிக அருகில் என்றால் மூன்று நிமிடம் எக்ஸ்ட்ரா டைம். மூன்று நிமிடம் குஷன் டைம். மூன்று நிமிடம் கிரேஸ் டைம். மூன்று, மூன்று நிமிடங்கள் போதும். நடுத்தரத் தூரம் என்றால் மூன்று, ஐந்து நிமிடங்கள். நெடுந்தொலைவு என்றால் மூன்று, அரைமணி நேரங்கள்.

இந்த ECG முறையைப் பின் பற்றினால் அந்த ECG அதாவது நம் எக்கோ கார்டியோகிராம் [இதயத் துடிப்பு] சரியாகவே இருக்கும்.

நேர விஷயத்தில் நெருப்பாய் இருந்து உயர்ந்த நம் சமகாலத்துச் சான்றோர் மூவரைப் பற்றிக் காண்போம்.

# நேரத்தை மதித்து உயர்ந்த அந்த மூவர்

முத்தமிழறிஞர் கி.ஆ.பெ. விஸ்வநாதம் அவர்கள்; தவத்திரு குன்றக்குடி அடிகளார்; நடிகர் திலகம் சிவாஜி கணேசன் போன்றவர்கள் குறித்த நேரத்திற்குச் செல்வதில் நல்ல முன்னுதாரண மனிதர்கள்.

காலை 9.00க்குப் படப்பிடிப்பு என்றால் ஒன்பதுக்கு நுழையமாட்டார் நடிகர் திலகம். 7.30க்கே வந்துவிடுவார். அரிதாரம் பூசி, ஒப்பனை செய்துகொண்டு 9.00க்கு 'டாண்' என்று படப்பிடிப்பு அரங்கிற்குள் நுழைந்து விடுவார். இதைப்பற்றி வியந்து பேசாத திரையுலகினர் மிகக் குறைவு.

இவருடைய படப்பிடிப்பு என்றால் இயக்குநர் உட்பட அனைவரும் பதறுவார்கள். தொழிலை அந்த அளவுக்கு நேசித்தவர் நடிகர் திலகம் அவர்கள்.

ஒருமுறை தவத்திரு குன்றக்குடி அடிகளார் எனப்படும் மாசிலாமணி தேசிகர் அவர்கள், குறித்த நேரத்திற்கு ஒரு கூட்டத்திற்கு வந்து அது ஆரம்பிப் பதற்கான அறிகுறிகள் சற்றும் தெரியாமல் போகவே, ஒன்றும் தெரிவிக்காமல் மௌனமாக வெளியேறிய சம்பவம் ஒன்றை நானே கண்டிருக்கிறேன்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. அவர்கள் நேர விஷயத்தில் நெருப்பு. எல்லாம் அவருக்கு நேரப்படி நடக்க வேண்டும். இந்த விஷயத்தில் இவர் காண்பித்த கண்டிப்பு, பலர் இரசிக்காத ஒன்று என்றாலும், அதை உரியவர்களே

வியந்து பேசிய கதைகளையும் நான் காதாரக் கேட்டிருக்கிறேன்.

நம் இல்லத்தில் ஒரு விசேஷம். அழைக்க நேரில் வருகிறேன் என்று நான்கு இடங்களுக்கு அறிவித்து நேரமும் சொல்லுகிறோம். ஆனால் ஏதோ இடைஞ் சல். இதனால் நான்கு இடங்களுக்கும் தாமதமாகச் சென்று அசடு வழிவது பலரது இயல்பு.

இவர்களுக்கு ஒரு யோசனை. ஓர் இடத்திற்குச் செல்வதைத் தவிர்த்துவிட்டு மற்ற மூன்று இடங்களுக்கும் சரியான நேரத்தில் நுழைவதே சிறந்தது.

மற்றவர்களைக் காக்க வைக்கவும், அவர்களது நேரத்தை விழுங்கவும் நமக்கு ஒருபோதும் உரிமை இல்லை.